www.Padasalai.Net www.CBSEtips.in

**11** - ஆம் வகுப்பு **காலாண்டுப் பொதுத் தேர்வு – 2022** பதிவு எண். 1 1 3 2 6

காலம் : 3.00 மணி **தமிழ்** மதிப்பெண்கள் : 90

**பகுதி – I** 14 X 1 = 14

**குறிப்பு : i) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுத வேண்டும்.**

1. "கபாடபுரங்களைக் காவுகொண்டபின்னும்
காலத்தால் சாகாததொல் கனிமங்கள்" – அடிமோனையைத் தெரிவு செய்க. அ) கபாடபுரங்களை – காவுகொண்ட ஆ) காலத்தால் – கனிமங்கள் இ) கபாடபுரங்களை – காலத்தால் ஈ) காலத்தால் – சாகாத
2. பிரமிள் ஈடுபாடு கொண்டிருந்தது .................. , ......................
அ) ஓவியம் சிற்பம் ஆ) முத்தமிழ் ஓவியம் இ) இசை நடனம் ஈ) ஓவியம் நடனம்
3. காவடிச்சிந்துக்குத் தந்தை என்று அழைக்கப்படுபவர் யார்?
அ) பாரதியார் ஆ) அண்ணாமலையார் இ) முருகன் ஈ) அருணகிரிநாதர்
4. 9 அடிசிற்றெல்லையும் 12 அடிபேரெல்லையும் கொண்ட நூல் .................. .
அ) நற்றிணை ஆ) குறுந்தொகை இ) அகநானூறு ஈ) ஐங்குறுநூறு
5. ஆனந்தரெங்கருக்குத் தொடர்பில்லாத குறிப்பு எது? அ) மொழிபெயர்ப்பாளர் ஆ) இந்தியாவின் பெப்பிசு இ) தலைமைத் துவிபாஷி ஈ) உலகநாட்குறிப்பு இலக்கியத்தின் தந்தை
6. ஏடு சுவடி பொத்தகம் பனுவல் முதலிய சொற்கள் தரும் பொருள் .................. என்பதாகும்.
அ) நூல் ஆ) ஓலை இ) எழுத்தாணி ஈ) தாள்
7. நீலகிரியில் உள்ள தோடர் இனத்தவர் புனித இடமாகக் கருதுவது .................. .
அ) மதிற் சுவர்களை ஆ) திண்டுகளை இ) பால் எருமைக் கொட்டில்கள் ஈ) நீர் நிலைகளை
8. கருப்பட்டி பனங்கற்கண்டு போன்றவை........... . அ) மதிப்புக் கூட்டுப்பொருள் ஆ) நேரடிப் பொருள்
அ) 1 மட்டும் சரி ஆ) 2 மட்டும் சரி இ) இரண்டும் ஈ) 1 தவறு 2 சரி
9. 'யானை டாக்டர்' என்ற குறும்புதினத்தில் இடம் பெற்றுள்ள சிறுகதைத் தொகுப்பு .................. .
அ) அறம் ஆ) ஊமைச் செந்நாய் இ) மத்தகம் ஈ) கொற்றவை
10. மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துகள் மொத்தம் அ) 12 ஆ) 22 இ) 20 ஈ) 24
11. பெருங்கலம் என்னும் சொல்லிற்குரிய புணர்ச்சி விதிகளைத் தேர்வு செய்க. அ) ஈறுபோதல் தன்னொற்றிரட்டல் ஆ) ஈறுபோதல் இனமிகல் இ) ஈறுபோதல் ஆதிநீடல் ஈ) ஈறுபோதல் இணையவும்
12. பகுபத உறுப்புகளுள் இடம் பெறும் அடிப்படை உறுப்புகள் எவை? அ) பகுதிவிகுதி இடைநிலை சந்தி சாரியை விகாரம் ஆ) பகுதி இடைநிலை சாரியை இ) பகுதி சந்தி விகாரம் ஈ) பகுதி விகுதி
13. 'Harvesting', – கலைச்சொல் தருக. அ) அறுவடை ஆ) வேர்முடிச்சு இ) ஒட்டு விதை ஈ) தொழுஉரம்
14. 'உதித்த' – இலக்கணக் குறிப்பு தருக. அ) பெயரெச்சம் ஆ) வினையெச்சம் இ) பண்புத்தொகை ஈ) எண்ணுமை

**பகுதி – II (பிரிவு – 1)**

**இரண்டு அல்லது மூன்று வரிசையில் விடை தருக. எவையேனும் மூன்றனுக்கு விடையளி.** 3 X 2 = 6

15. 'பள்ளு' – குறித்து எழுதுக.
16. காவடிச்சிந்து என்பது யாது?
17. இங்கே ஐம்பதாண்டுவேம்பு
கோடையில் கொட்டும் பூக்களை
எண்ணச் சொல்கிறார்கள் – எண்ணச் சொல்கிறவர்கள் யார்?
எண்ணுபவர்கள் யார்?
18. 'ஊழையில் ஊக்கமும் ஒளிரக் காய்த்தநல்
தீஞ்சொலுஞ் செல்வமே பழுத்தசேணகர்' – **இப்பாடலடிகளில் ஒளிரக் காய்த்தது எது? பழுத்தது எது?**

**பிரிவு – 2**

**எவையேனும் இரண்டனுக்கு விடையளி.** 2 X 2 = 4

19. 'கோட்டை' என்னும் சொல் திராவிட மொழிகளில் எவ்வாறு எடுத்தாளப்பட்டுள்ளது?
20. மாணவர்கள் எவ்வாறு கல்வி கற்றனர் என்று புறநானூறு அடிகள் குறிப்பிடுகின்றன?
21. ஆனந்தரங்கரின் வருணனைத் திறனுக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

**பிரிவு – 3**

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக.** 7 X 2 = 14

22. உயிரீறு, மெய்யீறு – விளக்குக.
23. ஈரசைச்சீர்களுக்கு வழங்கப்படும் வேறு பெயர்கள் யாவை?
24. உவமை எவ்வெவற்றின் அடிப்படையில் தோன்றும்?
25. மெய்மயக்கம் என்றால் என்ன? எத்தனை வகைப்படும்?



Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593 CamScanner

www.Padasalai.Net www.CBSEtips.in

26. வேர்ச்சொற்களை தொடர்களாக மாற்றுக. ஓடு, பாடு
27. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக. சான்றோர் மிகுந்த பொறுப்புடன் சிறப்பானசேவைப் புரிந்து கொள்கையை நிலைநாட்ட செய்தனர்.
28. பொருள் வேறுபாடு அறிந்த தொடரமைக்க. பொரி – பொறி
29. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க. நஞ்சிருக்கும், நஞ்சு இருக்கும்
30. விடைக்கேற்ற வினா அமைத்தல்.
வழக்கறிஞராகத் தொழில்புரிவதை விடத் தமிழின்பத்தில் திளைப்பதையே டி.கே.சி விரும்பினார்.

## பகுதி – III (பிரிவு – 1)

**ஐந்து அல்லது ஆறு வரிகளில் விடை தருக. எவையேனும் இரண்டனுக்கு விடையளிக்க.** 2 X 4 = 8

31. சங்ககாலத்தில் நடைபெற்ற சமூக நிகழ்வு வெள்ளி வீதியார் பாடலில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. இக்காலச் சமூக நிகழ்வுகள் எழுத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளமையை ஒப்பிட்டு விளக்குக.
32. 'ஏவல் மறுக்கும் சிறுவினையாட்டி அறிவும் ஒழுக்கமும் யாண்டுணர்ந்தனள் கொல்' - இடம் சுட்டிப் பொருள் விளக்குக.
33. "கலைவலார் மறையவர் கருத்தில் எண்ணியது" - யாது?
34. மேகத்திடம் கூறுவது போலத் தோழி தலைவனுக்கு உணர்த்திய இறைச்சிப் பொருள் யாது?

## (பிரிவு – 2)

**எவையேனும் இரண்டனுக்கு விடையளி.** 2 X 4 = 8

35. இயற்கை வேளாண்மை எல்லாக்காலத்திலும் நிகழ நாம் செய்ய வேண்டுவன யாவை?
36. 'மலை மனிதவாழ்வில் சிறப்பிடம் பெற்றுள்ளது' என்பதை எடுத்துக்காட்டுடன் விவரி.
37. சமணப் பள்ளிகளும் பெண்கல்வியும் – குறித்து வரைக.
38. ஆனந்தரங்கர் ஒரு வரலாற்று ஆசிரியர் என்பதைப் பாடப்பகுதி வழி எடுத்துக்காட்டுக.

## பிரிவு – 3 3 X 4 = 12

39. பிறிது மொழிதல் அணி சான்று தந்து விளக்குக. **(அல்லது)** 'தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே நாவினாற் சுட்டவடு" - இக்குறட்பாவில் பயின்றுவரும் அணியை விளக்குக.
40. ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்துள் எவையேனும் நான்கினைக் கூறுக.
41. பொதுவியல் திணை. **(அல்லது)** பொருண்மொழிக்காஞ்சித்துறையைச் சான்று தந்து விளக்குக.
42. மையக்கருத்தை கூறி ஏற்புடைய நயங்கள் மூன்றை எழுதுக.

பெண்ணுக்கு ஞானத்தைவைத்தான் – புவி
பேணிவளர்த்திடும் – ஈசன்;
மண்ணுக்குள்ளேசிலமூடர் – நல்ல
மாதர் அறிவைக் கெடுத்தார்
கண்கள் இரண்டினில் ஒன்றைக் – குத்தி
காட்சி கெடுத்திடலாமோ?
பெண்கள் அறிவை வளர்த்தால் – வையம்
பேதமையற்றிடும் காணீர்! – *பாரதியார்.*

43. **தமிழாக்கம் தருக.** 1.Just living is not enough. One must have sunshine feerdom and a little flower - *Hans Anderson.*
2. In nature, light creates the colour. In the picture, colour creates the light - *Hans Hofmann*
3. Look deep into nature and then you will understand everything better - *Albert Einstein.*
4. Roads were made for journeys not destinations - *Confucius.*

**காதுகேளாதவர்களுக்கான மாற்று வினா. கீழ்க்காணும் பத்தியைப் படித்து நான்கு வினாக்களை உருவாக்குக.**
'தமிழ்' என்ற சொல் தமிழுக்கு இனிமையானது. 'இனிமையும் நீர்மையும் தமிழெனல்' ஆகும் என்று பிங்கல நிகண்டு குறிப்பிடுகிறது. ' தமிழ் என்ற சொல்லை இனிமை பண்பாடு அகப்பொருள் என்னும் பொருள்களிலும் வழங்கியுள்ளனர். "அதூஉம் சாலும் நற்றமிழ் முழுதறிதல்" என்ற புறநானூற்றுப் பாடலடியில் 'தமிழ்' என்னும் சொல் மொழி, கவிதை என்பவற்றைத் தாண்டிப் 'பல்கலைப் புலமை' என்ற பொருளில் ஆளப்பட்டுள்ளது. கம்பன் "தமிழ் தழீஇயசாயலவர்" என்னும் மிடத்து 'தமிழ்' என்பதற்கு அழகும் மென்மையும் பொருளாகின்றன.

## பகுதி – IV

**குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் இருபக்கங்களுக்கு மிகாமல் விடையளி.** 3 X 6 = 18

44. அ) மதீனா நகரம் ஒரு வளமான நகரம் என உமறுப்புலவர் வருணிக்கும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.
**(அல்லது)** ஆ) 'அடக்கமுடைமை ஒருவரை வாழ்வினில் உயர்த்தும்' – இக்கூற்றை முப்பால் வழி விளக்குக.
45. அ) இயற்கையோடு இயைந்து வாழ்வு நடத்திய தமிழர்களின் வாழ்வில் இருப்பிடங்களின் பெயர்களும் இயற்கையோடு இயைந்தே இருந்தன – கூற்றினை மெய்ப்பிக்க. **(அல்லது)** ஆ) பௌத்தக் கல்வி, சமணக் கல்வி, மரபு வழிக்கல்வி முறைகளால் தமிழகக்கல்வி முறையில் ஏற்பட்ட பல்வேறு மாறுதல்களை விவரிக்க.
46. அ) வாடிவாசல் கதை வாயிலாக நீங்கள் உணர்ந்த கருத்துகளை விளக்குக. **(அல்லது)**
ஆ) பிம்பம் கதையில் வாயிலாகப் பிரபஞ்சன் தெளிவுபடுத்தும் மனித முகங்களைப் பற்றி விவரிக்க.

## பகுதி – V

**குறிப்பு : அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக.** 4 + 2 = 6

47. அ) 'அம்மாவாழி' எனத் தொடங்கும் வெள்ளிவீதியார் பாடலை எழுதுக. ஆ) 'செயல்' என முடியும் குறளை எழுதுக.



Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593 CamScanner